

தலைமைச் செயலகத்தில் நேற்று (18.10.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்(பொ) க.பணீந்திர ரெட்டி, கனிம வளத்துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், மற்றும் கனிம வளத்துறை இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

### நவ. 1 முதல் 50 சதவிகிதத்திலிருந்து 53 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்படும்!

# அரசு அலுவலர்கள் - ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.19-

**அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

நாட்டிற்கே வழிகாட்டும் வகையில் பல முன்னோடி நலத்திட்டங்களை மக்கள் நலன் கருதி சிறப்புற நடைமுறைப்படுத்துவதில் பெரும் பங்காற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இந்த அரசு கருத்தில் கொண்டு, அவர்களது நலன் காக்கும் வகையில் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த வகையில் ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு 01.07.2024 முதல் 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 53 சதவீதமாக அண்மையில் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதனை கனிவுடன் பரிசீலித்து 01.07.2024 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதனால் 50 சதவீதமாக உள்ள அகவிலைப்படி 3 சதவீதம் உயர்ந்து 01.07.2024 முதல் 53 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள். ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய் 1931 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### திருக்கோயில்கள் சார்பில் திருவான்மியூரில் – அக்.21 அன்று

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 31 இணைகளுக்கு திருமணம்!

## மாநிலம் முழுவதும் 304 திருமணங்கள்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, அக்.19-*

*திருக்கோயில்கள் சார்பில், திருவான்மியூரில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 31 இணைகளுக்கு 21.10.2024 அன்று திருமணம் நடைபெறுகிறது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்துள்ளார்.*

*முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை மண்டல திருக்கோயில்கள் சார்பில் நடைபெற உள்ள திருமண விழாவில் பங்கேற்கும் 31 மணமக்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (18.10.2024) ஆணையர் அலுவலகத்தில் பட்டு வேட்டி, சட்டை, துண்டு மற்றும் பட்டு புடவைகளை வழங்கினார்.*

*2024-2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற மானியக்கோரிக்கையில் "பொருளாதாரத்தில் பின்தங்கிய 700 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் முதற்கட்டமாக சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 21.10.2024 அன்று திருவான்மியூரில் 31 இணைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கிட உள்ளார். அதேநாளில் மாநிலம் முழுவதும் 304 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட உள்ளன. சென்னையில் நடைபெறும் திருமணத்தில் பங்கேற்கும் மணமக்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பட்டு வேட்டி, சட்டை, துண்டு மற்றும் பட்டு புடவைகளை வழங்கினார்.*

*பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,*

*முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறை இறையன்பர்கள் மகிழ்ச்சி கொள்கின்ற வகையில் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த துறை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இதுபோன்ற பக்தர்களின் நலன் காக்கும் திட்டங்களை இந்த அரசுதான் நிறைவேற்றி வருகிறது என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அந்த வகையில் திருக்கோயில்கள் சார்பில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று திருவிளக்கு பூஜை நடத்துகின்ற திட்டம் தொடங்கப்பட்டு இது வரை 17 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஒரு நபருக்கு ஆகின்ற செலவின தொகை ரூ.800ல் நான்கில் ஒரு பங்கான ரூ.200 மட்டுமே பக்தர்களிடம் பெறப்படுகிறது. இதர தொகை அந்தந்த திருக்கோயில்களே செலவிடுகின்றன. இதன்மூலம் 47,304 பெண் பக்தர்கள் பயன்பெற்றுள்ளனர்.*

*இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு திருக்கோயில்களில் ஒரு வேளை அன்னதானம் வழங்கும் திட்டத்தில் 20 திருக்கோயில்களிலும், நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் 9 திருக்கோயில்களிலும் விரிவுப் படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம் புதிதாக தொடங்கப்பட்டு 20 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில்கள் சார்பில் கமலமுனி சித்தர், சுந்தரானந்த சித்தர், பாம்பாட்டி சித்தர் போன்ற சித்தர்களுக்கும், திருவருட் பிரகாச வள்ளலார், தெய்வப்புலவர் சேக்கிழார், தமிழ் மூதாட்டி ஔவையார், சமய ஒருவரான திருநாவுக்கரசர், நாலாயிர திவ்ய பிரபந்தம் மறைநூலினை தொகுத்தவரான ஸ்ரீமத் நாதமுனிகள், அவரது பெயரன் ஆளவந்தார் ஆச்சாரியார், 63 நாயன்மார்களில் ஒருவரான நந்தனார், காரைக்கால் அம்மையார் போன்ற அருளாளர்களுக்கும் விழா எடுத்து பெருமை சேர்த்த அரசு திராவிட மாடல் அரசாகும்.*

*எந்த ஒரு திருக்கோயில் சார்பிலும் மகா சிவராத்திரி விழா தனியாக கொண்டாடப்படாத நிலையில் இந்த அரசு பொறுப்பேற்றபின் 7 திருக்கோயில்களில் பக்தர்கள் பங்கேற்புடன் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் மகா சிவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தாண்டு மேலும் 2 திருக்கோயில்களில் கொண்டாடப்பட உள்ளது. அதேபோல சென்னை மயிலாப்பூரில் கடந்த 2 ஆண்டுகளாக மாபெரும் கொலுவுடன் நவராத்திரி பெருவிழாவும், சுவாமி ஐயப்பனுக்கு மலர் பூஜை விழாவும் நடத்தப்பட்டு வருகிறது.*

*முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், மானசரோவர் மற்றும் முக்திநாத் புனித தலங்களுக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ள அரசு மானியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இராமேசுவரம் காசி ஆன்மிகப் பயணத்தை ஒன்றிய அரசு அறிவிப்பதற்கு முன்பாகவே முதல் முதலில் செயல்படுத்திய அரசு திராவிட மாடல் அரசாகும். 2 ஆண்டுகளில் 500 பக்தர்கள் காசிக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர். ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கு 1,003 மூத்த குடிமக்களும் மற்றும் புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களுக்கு 1,014 மூத்த குடிமக்களும், அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தில் 1,008 மூத்த குடிமக்களும் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டங்களுக்கான நிதி அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலை துறையின் வரலாற்று இல்லாத அளவிற்கு இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 2,226 திருக்கோயில்களுக்கு இதுவரையில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளதோடு, திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.6,792 கோடி மதிப்பிலான 7,069.30 ஏக்கர் சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப் பட்டுள்ளன.*

*பொருளாதாரத்தில் பின் தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் கட்டணமில்லாமல் திருமணம் செய்து வைக்கப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் 500 இணைகளுக்கும், 2023- 2024 ஆம் ஆண்டில் 600 இணைகளுக்கும் என 1,100 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைத்து அவர்களின் இல்லங்களில் ஒளி ஏற்றிய பெருமை முதலமைச்சர் அவர்களையே சேரும். இந்தாண்டு 700 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட உள்ளது. முதற்கட்டமாக சென்னை, திருவான்மியூரில் 21.10.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 31 இணைகளுக்கு மங்கல நாண் எடுத்துக் கொடுத்து திருமணத்தை நடத்தி வைப்பதோடு சீர்வரிசைப் பொருட்களையும் வழங்க உள்ளார். அதேநாளில் தமிழகம் முழுவதும் 304 இணைகளுக்கு திருமணங்கள் நடைபெறவுள்ளன.*

*இந்து சமய அறநிலையத் துறை ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் வடகிழக்கு பருவமழையினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாத அளவிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் மழைநீர் தேங்கியிருந்த பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு உடனுக்குடன் நீரினை வெளியேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. சென்னையில் பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு திருக்கோயில்கள் சார்பில் மூன்று நாட்கள் அன்னதானம் மற்றும் உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.*

*வடலூரில் வள்ளலார் சர்வ தேச மையம் அமைக்கும் பணிகளை இரண்டு பகுதிகளாக பிரித்து ஒரு பகுதியில் கட்டுமான பணிகள் தொடரலாம் எனவும், அப்பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை கணக்கிடவும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. ஆகவே விரைவில் பணிகள் தொடங்கப்படும். ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து அவற்றை மீட்பதற்கான பணிகளை மாவட்ட நிர்வாகமும், இந்து சமய அறநிலையத்துறையும் இணைந்து மேற்கொள்ளும்.*

*சிதம்பரம் நடராசர் திருக்கோயில் ஆக்கிரமிப்பு நிலங்களை பொறுத்தளவில் நீதிமன்றம் கடுமையான உத்தரவை பிறப்பித்துள்ளதோடு, அதனை ஆய்வு செய்வதற்கு வெளிமாநிலத்தை சேர்ந்த மாவட்ட ஆட்சியாளரை நியமித்திருக்கிறது. ஆகவே சிதம்பரம் திருக்கோயிலில் தவறுகள் நடந்திருந்தால் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க இந்து சமய அறநிலையத் துறையும், திராவிட மாடல் அரசும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ஏற்பட்ட ரீல்ஸ் பிரச்சனை தொடர்பாக உரிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீதித்துறை காட்டுகின்ற திசையை நோக்கி பயணிப்போம். புழல் திருக்கோயில் பூசாரி ஒருவர் மின்சாரம் தாக்கியது எதிர்பாராமல் நடந்த விபத்தாகும். அனைத்து திருக்கோயில்களிலும், முன்னெச்ச ரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு அவரை உரிய நேரத்தில் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் காக்கப்பட்டுப்பட்டுள்ளது.*

*முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி அவர்களது துயரங்களை களைவதற்கு துணை முதலமைச்சர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். என்னுடைய பணிகளால் இந்த பொறுப்பு எனக்கு தகுதியான பொறுப்பு என்பதை நான் நிரூபித்து காட்டுவேன் என துணை முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார். அவர் பொறுப்புக்கு வந்த உடனேயே சவாலாக இந்த பெரு மழை வந்த போதும் அதனை திறமையாக சமாளித்தவர் என்ற நற்சான்றிதழ் மக்களிடம் கிடைத்திருக்கின்றது.*

*திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் திருமண விழாவில் திருமணம் செய்து கொள்ள இருக்கின்ற மணமக்கள் எல்லா நலமும், வளமும் பெற்று தமிழக முதல்வர் அவர்களை போல் கடுமையான ஓய்வில்லாத உழைப்பாளிகளாகவும், மங்காத புகழுக்கு சொந்தக்காரர்களாகவும் நீங்கள் இருக்க வேண்டும் என வாழ்த்துகிறேன் என்று தெரிவித்தார்.*

*இந்நிகழ்வின்போது இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் ச.லட்சுமணன், பொ.ஜெயராமன், திருமதி கோ.செ.மங்கையர்க்கரசி, திருமதி இரா.வான்மதி, திருமதி கி.ரேணுகாதேவி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (18.10.2024) திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, அம்பேத்குமார், பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, திருவண்ணாமலை மாநகராட்சி மேயர் திருமதி. நிர்மலா கார்த்தி வேல்மாறன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர்.தாரேஸ் அகமது, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை துணை செயலாளர் எம். பிரதாப், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர்.இரா.சுகுமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.10.2024) திருவண்ணாமலை திருக்கார்த்திகை மகா தீபத் திருவிழாவை முன்னிட்டு, கிரிவல பாதையில் பக்தர்கள் வசதிக்காக சீனிவாசா பள்ளி அருகே தனியார் பங்களிப்புடன் ரூ. 75 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சுகாதார வளாக கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.10.2024) திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் பக்தர்கள் வசதிக்காக நெடுஞ்சாலைத்துறை மூலமாக ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை திறந்து வைத்தார். மேலும், ரூ.1.2 கோடி மதிப்பீட்டில் புதியதாக 6 சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளை விரைந்து மேற்கொண்டு தீபத் திருவிழாவிற்குள் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாநகரம் 49வது வார்டு சத்யா நகரில் பாதாள சாக்கடை திட்டப் பணியை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு கே. ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாநகராட்சி கமிஷனர். நவேந்திரன், பகுதிச் செயலாளர்கள் கே.திலகர், எஸ்.சந்துரு, அ.தசரதன், மாநகர நிர்வாகிகள் கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்து செல்வம், வ.மலர்மன்னன், அ.யுவராஜ், மாமன்ற உறுப்பினர் திருமதி.பூங்கொடி தசரதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.